ஓம்

கம்பன் புகழ் வாழ்க!

கன்னித் தமிழ் வாழ்க!

# ஏரெழுபது.

கவிச்சக்கரவர்த்தி

**கம்பன்**

வெளியிடுவோர்:

கிழார். ஆ. நடராஜ பிள்ளை,

போத்தனூர்.

ஓம்

கம்பன் புகழ் வாழ்க!

கன்னித் தமிழ் வாழ்க!

# ஏரெழுபது.

கவிச்சக்கரவர்த்தி

**கம்பன்**

வெளியிடுவோர்:

கிழார். ஆ. நடராஜ பிள்ளை,

பொத்தனூர்.

இந்நூல்

பொத்தனூர்

கிழார். கு. ஆறுமுகம் பிள்ளை அவர்களின்

ஞாபகார்த்தமாக

குமாரர்

கிழார். ஆ. நடராஜ பிள்ளை அவர்களால்

வெளிடப்பட்டது.



கிழார். கு. ஆறுமுகம் பிள்ளை,

பொத்தனூர்.

ஓம்.
தென்னாடுடைய சிவனே போற்றி.
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

பொத்தனூர்

# கிழார். கு. ஆறுமுகம் பிள்ளை அவர்களின்

## வரலாறு.

பொன்னித் தாயின் தீம்பால் நுகர்ந்து வளத்தோடு பொலிவது பொத்தனூர்-புதுப்பாளையம். அவ்வூரில் சோழிய வேளாளர் மரபில் கிழார் குப்பையாண்டிப் பிள்ளை என்பவர் வாழ்ந்தார். அவர் மீனாட்சி அம்மை என்ற நங்கையை மணந்து இல்லறத்தை இனிது நடாத்தினார். இவர்கள் செய்த தவப்பயனாய் கர வருடம் கார்த்திகை மாதம் பதினொன்றும் தேதி ஆருவது மகவாய்க் கிழார். ஆறுமுகம் பிள்ளை அவர்கள் பிறந்தார்கள்.

திருத்துழாய் முளையிலே மணம் பெற்றிருப்பதைப்போல, இவர் இயல்பிலேயே நற்குண நற்செயல்கள் பொருந்தியவராய்த் திகழ்ந்தார். இளமைக் காலத்தில் இவர் உள்ளூரிலேயே கற்வி பயின்றார். பிறகு இவர் ஆறு கல் தொலைவிலுள்ள பாலப்பட்டிக்குச் சென்று கண்ணும் கருத்துமாய்க் கல்வி பயின்றார். நல்லோர் கூட்டுறவாலும் சாதுக்களின் தொடர்பினாலும், தில்லைக் கூத்தப் பெருமான் மீது இவருக்கு எல்லையற்ற அன்பு உண்டாயிற்று.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கவரப்பட்டி இராஜலிங்கம் பிள்ளை என்பவருக்கும் சின்னம்மாள் என்பவருக்கும் அருந்தவப் புதல்வியாய்த் தோன்றிய காமாட்சி அம்மையாரை இவர் தமது 21-ஆம் வயதில் திருமணம் புரிந்து கொண்டார். வள்ளுவர் கூறிய வண்ணம் இல்லறம் நல்லறமாக இருவரும் இனிது நடாத்தினர்.

இவர்கள் இல்லம், "விருந்தினர்க்குப் புகலிடமாய் அன்பும் பண்பும் மேவுதற்குக் கோயிலாய்" விளங்கியது.

இவருக்கு 'சாரதாம்பாள், நடராஜப் பிள்ளை, தியாகராஜப் பிள்ளை என்ற மூன்று மக்கள் பிறந்தனர். இவர் சிவனடியார்க்கு அன்னம் அளித்தல், சிவத்தொண்டு புரிதல் என்ற இரண்டையும் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். மேலும் இவர் நவராத்திரி, சிவராத்திரி கட்டளைகளை ஒழுங்குற நடத்திவந்தார்.

கிழார். ஆறுமுகம் பிள்ளை அவர்கள் சிறந்த சிவபக்திச் செல்வர். ஏழை எளியவர்பால் இரக்கம் உடையவர். களைகண் அற்றவருக்குக் காமதேனுவாய்த் திகழ்ந்தார். புலவர்களுக்குக் கற்பகத் தருவாய்ப் பொலிந்தார். நம் கிழார். ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தன் வருவாயில் ஒரு பகுதியை அறப்பணிகளுக்காக ஒதுக்கி வைத்தார். இவர் முப்பத்துநாலாம் வயதில் (குரோதன வருடம் கார்த்திகை மாதம் ஒன்பதாம் தேதி) உற்றரும் ஊராரும் ஒருங்கே வருந்தத் தில்லையில் ஆராவமுதத் திருநடம் புரியும் இறைவன் திருவடியடைந்தார்.

கிழார். ஆறுமுகம் பிள்ளையின் ஞாபகார்த்தமாக இவரது துணைவியார் காமாட்சி அம்மையார் கபிலர் மலையில் படிகளும் மடைப்பள்ளியும் புதிதாக அமைத்தார்கள். ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் இவர் நினைவாக சமாராதனை நடைபெற்று வருகிறது.

கிழார். ஆறுமுகம் பிள்ளையின் திருக்குமாரராகிய நடராஜப் பிள்ளையவர்கள் தன் தந்தையின் பெயர் நீடுநின்று நிலைத்து விளங்கவேண்டும் என்பதற்காகப் பொத்தனூர் உயர்நிலைப் பள்ளிக்கு சுமார் இருபதாயிரம் ரூபாய் செலவில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஒன்று கட்டித் தந்துள்ளார்கள்.

கிழார், ஆறுமுகம் பிள்ளையவர்கள் இறைவன் திருவடி அடைந்தும் அவரது ஆத்மா இத்தகைய நல்லறங்களை ஆற்றிவருவது நமது தவப்பேறேயாம். ❋ ❋

ஓம்.
சிவமயம்.

# கிழார். ஆறுமுகம் பிள்ளையின் புகழ்.

அண்ணலார் பாகத்தை ஆளும் செல்வி
அருளார்ந்த பார்வதியார் உயிர்கள் பால்கொள்
உண்ணெகிழ்ந்த கருணையெனப் பொலி காவேரி
ஒப்பில்லா அலைக்கரத்தால் வளர்ந்த நல்லூர்;
தண்ணமிழ்த மனையதமிழ்ச் செல்வம் பெற்ற
சான்றோர்கள் வாழூர்; சைவப் பண்பைக்
கண்ணெனனப் போற்றுமூர்; அன்பி லோங்கிக்
கனிவுற்ற பொத்தனூர்; வாழி! வாழி!

பொத்தனூர் என்னும் புதுப்பா ளையத்தில்
வித்தகர் புகழும் வேளாண் குடியில்
ஒப்பிலாப் புகழுடைக் குப்பை யாண்டிப்
பிள்ளைசெய் தவத்தாற் பிறந்த நம்பி:

ஆறுமுகப் பேருடையார் சிவபி ரானை
யன்புடனே முப்போதும் பூசை செய்வார்
மாறுபடும் பகைவருக்கும் கருணை காட்டும்
மாணறத்தைக் குறிக்கோளாய் கொண்ட நம்பி

பழுமரமாய் ஊருணியாய்
பண்புடைய கற்பகமாய்
விழுமியநற் புகழோடு
விளங்கினரால் ஊர்வாழ்த்த.

சீரார்ந்த ஆறுமுகச் செல்வர் வாழ்விற்
செய்யவேண் டியவனைத்தும் சிறப்பாய்ச் செய்து
ஆராத வமுதநடம் புரியும் பெம்மான்
அடிமலரில் மணமாக ஒன்றி னாரால்.

சிந்தையைச் சிவனுக் கீந்த
சீர்ஆறு முகப்பேர் கொண்ட
அந்தமில் புகழார் பெற்ற
அருந்தவப் புதல்வர் சாலத்
தந்தையைப் போன்று மிக்க
தருமத்திற் பற்றுக் கொண்ட
சிந்தையார் நடராசப் பேர்ச்
சீரிய குணத்தின் மிக்கார்

தந்தைபாற் கொண்ட தகவுறும் அன்பால்
தந்தையின் பெயரித் தரணியில் நிலைக்க
வடிவேல் முருகன் வாழும் கபிலையில்
படிகளும் சீர்மடைப் பள்ளியும் அமைத்தார்

பொத்தனூர் உயர்நிலைப் பள்ளி பொலிவுற
வித்தகத் தந்தையின் பெயர்வி ளங்கிட
அறிவிய லாய்வகம் அமைத்துத் தந்தனர்
பிறையணி யிறையருள் பெருகி வாழ்கவே!

ஓம்
திருவழுந்தூர்வருதேசிக! போற்றி!

# முகவுரை

உலகப் பெருங் கவிகளில் ஒருவன் கம்பன். அவன்றன் காவியமாகிய கம்பராமாயணம் தலைசிறந்த உலகப் பெருங் காவியம். கம்பராமாயணத்தின் மூலமே கம்பனை நாம் அறிவோம். கம்பனால் இயற்றப்பட்ட ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி என்ற பிற காவியங்களை நாம் பெரும்பாலும் அறியோம் நமது தமிழ்த்தாயின் மணிமுடியில் நடு நாயகமாய் ஒளிவீசும் மாணிக்கம், கம்பராமாயணம் என்றால் அம்மணிமுடியைச் சுற்றி ஒளிரும் வைடூரியங்களே, கம்பனதுமற்ற படைப்புகள்.

விலைமதிக்கவொண்ணாத கற்களில் சில தானே ஒளிரும்! சில பிரதிபலிக்கும்! தானே ஒளிரும் கதிர்களைக் கொண்டது, கம்பனது படைப்பு!

கம்பனால் இயற்றப்பட்ட இந்த ஏரெழுபது வேளாண்குடி மக்களைச் சிறப்பித்துள்ளது. வள்ளுவர், யாவரிலும் சிறந்தோர் உழவர் என்றார். தவத்திற்கும் தவமுடைய சான்றோர்க்கும் முன் வைத்தார் உழவர்களை, அப்பெரியார். ஆனால், தேவர்க்கும், பின்னை மூவர்க்கும், முதல்வர்க்கும் முதல்வராய் உழவரை வைத்த பெருமை, கம்பனையே சாரும்.

'தொழுங் குலத்தில்....' என்று தொடங்கும் பாடலிலும், நூலின் முதற் பாட்டாகிய 'வேதியர்' எனத்தொடங்கும் பாடலிலும், தொழுதுண்டு பின் செல்பவர் யார் யார் என்பதைக் கவி விளக்கியுள்ளார். எருதுகளின் கழுத்தில் கட்டப்படும் கயிறுதான் நிலமகளின் மங்கலநாண் என்று கூறும் கருத்தழகும், "கண்ணுதற் கடவுளின் கண்டத்திலுள்ள கறை விண்ணவரை வாழ்வித்தது. எருத்தின் கழுத்தின் மேல் உள்ள கறையோ மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் ஒருங்கே காக்கின்றது" என்று கூறும் இலக்கிய இன்பமும்கற்பாருக்குக் கழிபேருவகை தருவனவாம்.

எவரொடும் ஒப்பாராய்க் கூறாமல், மிக்காராய்ப் பொருத்தமுற

மறுக்கொணுது ஏற்கும் முறையில் கூறுஞ் சிறப்பு, பெரும் புலவர்க்கன்றி வேறு யார்க்கும் அரிதாம்.

வளத்திற்கும், ஏனை வேள்வி நலத்திற்கும், உயிர்களின் வலிமைக்கும், எருதுகளின் வலியே மூலகாரணம்.

உழவு முழங்க, மறை விளங்கும்! கலை விளங்கும்! பா விளங்கும்! திரு விளங்கும்! உலகமெலாம் ஒலி விளங்கும். செஞ்சாலிக் குலை வளையச் சிலை வளையும்! அலை வளையும்! கொடுங்கலியின் தலை வளையும்!

பயிர் வளரச் சீர் வளரும்! மறை வளரும்! திறல் வேந்தர் முடி வளரும்! வணிகர் பெரு நிதி வளரும்! வற்றாத இசை வளரும். காராளர் பயிர் வளரச் செல்வமெலாம் வளரும்! மிக வளரும்!

ஏராலே சேறாக்கி எருவாலே கருவாக்கி, நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார்தம் பெருமை புகலுந் தரத்ததோ! எழுதொணு மறை விளங்கவும், இயலிசை நாடகம் விளங்கவும், பார் வேந்தர் முடி விளங்கவும் புழுதியே காரணமாகும். இன்னபிற கருத்துக் கருவூலங்கள் இந்நூலில் மலிந்து பொலிகின்றன. இக்கருத்துச் செல்வங்களை நாம் கற்றுத் துய்ப்போமாக.

ஏர் மங்கலம் பொழிய இனிதுழும் வேளாண் குடியின் உயர்வினைக் கூறும் இந்நூலை, அக்குடியில் பிறந்த, கிழார். ஆ. நடராஜ பிள்ளையவர்கள், தம் தந்தையின் நினைவாக வெளியிட்டுள்ளார். வெளியீட்டின் நோக்கம், கம்பநாடாது புகழை நாம் பருகவும் அவர் கூறியனவற்றை நாம் உணர்ந்து நமது கடமையை ஆற்றவும், ஆற்றியவழி உயிர்களை ஓம்பவும் ஆகும். வேளாண்குடி மக்களாகிய நாம், நமது உயர்வை உணரவும், நம்மை உயர்த்திய இறையருள் நாபடைத்த கம்பருக்கு நன்றி செலுத்தவும் இவ்வெளியீட்டின் மூலம் ஓர் வாய்ப்பினை அளித்த கிழார். ஆ. நடராஜ பிள்ளை நீண்ட ஆயுளொடு வாழ்ந்து அருட்பணி பல புரியத் தில்லையில் ஆடும் இறைவன் அருள்பாலிக்குமாறு இறைஞ்சுகின்றேன். வணக்கம்.

பொத்தனூர்,
வேலூர்–சேலம்.
13—11—60.

இங்ஙனம், அன்புள்ள,
**அ. சதாசிவம்,**
தலைமை ஆசிரியர்.

ஓம்
கம்பன் புகழ் வாழ்க.
கன்னித் தமிழ் வாழ்க.

# ஏரெழுபது

## பாயிரம்.

### கணபதி

கங்கைபெறுங் காராளர் கருவியெழு பதுமுரைக்க
அங்கைபெறும் வளைத்தழும்பு முலைத்தழும்பு மணியமலை
மங்கைபெறுந் திருவுருவாய் வந்துறைந்தார் தமைவலஞ்செய்
கங்கைபெறுந் தடவிகடக் களிற்றுனைக் கழல்பணிவாம்.

### திரிமூர்த்திகள்.

நிறைக்குரிய வந்தணர்க ணெறிபரவ மனுவிளங்கத்
தறைக்குரிய காராளர் தமதுவரம் பினிதோங்க
மறைக்குரிய பூமனையும் வண்டுளபத் தாமனையும்
பிறைக்குரிய நெடுஞ்சடிலப் பெம்மானை யும்பணிவாம்.

### நாமகள்

திங்களின்மும் மாரிபெயச் செகத்திலுயிர் செழித்தோங்கக்
கங்கைகுலா திபர்வயலிற் கருவீறத் தொழுகுலத்தோர்
துங்கமக மனுநீதி துலங்கிடவை யம்படைத்த
பங்கயன்ற னுவிலுறை பாமடந்தை பதந்தொழுவாம்.

## சோழமண்டலச் சிறப்பு

ஈழ மண்டல முதலென வுலகத்
தெண்ணு மண்டலத் தெறிபடை வேந்தர்
தாழு மண்டலஞ் செம்பியன் மரபினோர்
தாமெ லாம்பிறந் தினியபல் வளத்தின்
வாழு மண்டலங் கனகமு மணிகளும்
வரம்பில் காவிரி குரம்பினிற் கொழிக்குஞ்
சோழ மண்டல மிதற்கிணை யாமெனச்
சொல்லு மண்டலஞ் சொல்வதற் கில்லையே.

## சோழராசன் சிறப்பு

முடியுடைய மன்னவரின் மூவுலகும் படைத்துடைய
கொடியுடைய மன்னவரிற் குலவுமுதற் பெயருடையான்
இடியுடைய வொலிகெழுநீ ரெழுபத்தோன் பதுநாட்டுக்
குடியுடையான் சென்னிபிற ரென்னுடையார் கூறீரே.

## மகாநாட்டுச் சிறப்பு

மந்தர மனைய திண்டோண் மணிமுடி வளவன் சேரன்
சுந்தர பாண்டி யன்றன் சுடர்மணி மகுடஞ் சூட
அந்தணர் குலமு மெல்லா வறங்களும் விளங்க வந்த
இந்திர னேலக் கம்போ லிருந்தது பெரிய நாடே.

## வேளாண்குடிச் சிறப்பு

ஆழித் தேவர் கடலானு ரல்லாத் தேவ ரம்பலத்தார்
ஊழித் தேவர் தாங்கூடி யுலகங் காக்க வல்லாரோ
வாழித் தேவர் திருமக்கள் வையம் புரக்கும் பெருக்காளர்
மேழித் தேவர் பெருமைக்கு வேறுந் தேவர் கூறேனே.

## வேளாளர் சிறப்பு

தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென் னிவர்க்குப்பின் வணிகரெனுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடைய ராஞலென்
உழுங்குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே.

## அருட் சிறப்பு

அழுங்குழவிக் கன்புடைய தாயேபோ லனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காள ரெளியரோ யாம்புகழ
உழுங்கொழுவிற் கருவீறி யுலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகஞ் செய்வானேல்.

பாயிரம் முற்றிற்று.

## வேளாண் குலச்சிறப்பு

வேதியர்த முயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமுஞ்
சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிக ருண்டாகிற் கூறீரே. (1)

## உழவுநாட்கோடற் சிறப்பு

சீர்மங் கலம்பொழியுந் தெண்டிரைநீர்க் கடல்புடைசூழ்
பார்மங் கலம்பொழியும் பல்லுயிருஞ் செழித்தோங்குங்
கார்மங் கலம்பொழியும் பருவத்தே காராளர்
ஏர்மங் கலம்பொழிய வினிதுழநாட் கொண்டிடினே. (2)

## உழவுச் சிறப்பு

நீர்விழாக் கொளவளர்ந்த நிலமெல்லாந் தம்முடைய
சீர்விழாக் கொளவிளக்குந் திருவிழாப் பெருக்காளர்
ஏர்விழாக் கொளினன்றி யெறுழ்க்கரிதேர் மாப்படையாற்
போர்விழாக் கொளமாட்டார் போர்வேந்த ராஜனே. (3)

## அலப்படைச் சிறப்பு

குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளு மிவைநான்கும் படைத்துடைய ராஜனலென்
மடைவாளை வரும்பொன்னி வளநாடர் தங்கள்கலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே. (4)

## மேழிச் சிறப்பு

வாழிநான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளும்
ஆழியா லுலகளிக்கு மடல்வேந்தர் பெருந்திருவும்
ஊழிபே ரினும்பெயரா வுரைவுடைய பெருக்காளர்
வேழியால் விளைவதல்லால் வேறென்றால் விளையாவே. (5)

## ஊற்றாணிச் சிறப்பு

நீற்றேனு மலரோனு நெடியோனு மென்கின்ற
தோற்றாள ரிவராலே தொல்லுலக நிலைபெறுமோ
மாற்றாத காவேரி வளநாட ருழுங்கலப்பை
ஊற்றாணி யுளதாயி னுலகுநிலை குலையாதே. (6)

## நுகத்தடிச் சிறப்பு

உரையேற்ற செங்கதிரோ னொளிநெடுந்தேர் பூண்டநுகந்
திரையேற்ற கடலுலகிற் செறியிருளை மாற்றுவது
விரையேற்ற விருநிலத்தோர் வெறுமையொடு வீழாமே
கரையேற்று நுகமன்றோ காராள ருழுநுகமே. (7)

## நுகத்துளைச் சிறப்பு

வளைத்ததிரைக் கடல்சூழ்ந்த வையகத்தோ ரெல்லார்க்குந்
துளைத்ததுளை பசும்பொன்னி னணிகிடக்குந் துளைத்தல்லாற்
றிளைத்துவருஞ் செழும்பொன்னித் திருநாட ருழுநுகத்திற்
றுளைத்ததுளை போலுதவுந் துணையுளதோ சொல்லீரே. (8)

## நுகத்தாணிச் சிறப்பு

ஓராணித் தேரினுக்கு 'முலகங்க ளனைத்தினுக்கும்
பேராணிப் பெருக்காளர் பெருமைக்கு நிகருண்டோ
காராணிக் காவேரி வளநாட ருழுநுகத்தின்
சீராணிக் கொப்பதொரு சிறந்தாணி செப்பீரே. (9)

## பூட்டாங்கயிற்றுச் சிறப்பு

நாட்டுகின்ற சோதிடத்தி னுண்பொருத்த நாட்பொருத்தங்
காட்டுகின்ற கயிறிரண்டுங் கயிறல்ல கடற்புவியிற்
றீட்டுபுகழ்ப் பெருக்காளர் செழுநுகத்தோ டுழும்பகடு
பூட்டுகின்ற கயிறிரண்டும் புவிமகண்மங் கலக்கயிறே. (10)

## தொடைச் சிறப்பு

தடுத்தநெடு வரையாலுந் தடவரைக ளெட்டாலும்
உடுத்ததிரைக் கடலாலு முலகினிலை வலியாமோ
எடுத்தபுகழ்ப் பெருக்காள ரெழுநுகத்தோ டிணைப்பகடு
தொடுத்ததொடை நெகிழாதே யுலகுதொடை நெகிழாதே.
(11)

## கொழுச் சிறப்பு

வேதநூன் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரு முழுவார்தந் தலைக்கடைக்கே
கோதைவேன் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே
ஆதலா லிவர்பெருமை யாருரைக்க வல்லாரே. (12)

## கொழுவாணிச் சிறப்பு

செழுவான மழைவாரி திங்கடொறும் பொழிந்தாலுங்
கெழுவார நிலமடந்தை கீழ்நீர்கொண் டெழுந்தாலும்
வழுவாத காவேரி வளநாட ருழுகலப்பைக்
கொழுவாணி கொண்டன்றிக் குவலயஞ்சீர் நிரம்பாதே
(13)

## தாற்றுக்கோற் சிறப்பு

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுட்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதைக் கடற்றுணைப் போர்வேந்தர் நடத்துபெருஞ்
செங்கோலை நடத்துங்கோ லேரடிக்குஞ் சிறுகோலே. (14)

## உழவெருதின் சிறப்பு

வானமழை பொழிந்தாலும் வளம்படுவ தெவராலே
ஞானமறை யவர்வேள்வி நலம்பெறுவ தெவராலே
சேனைகொடு பொருமன்னர் செருக்களத்திற் செருக்குமத
யானைவலி யெவராலே யிவரெருத்தின் வலியாலே. (15)

## அதன்சுவற்கறைச் சிறப்பு

கண்ணுதலோன் றனதுதிருக் கண்டத்திற் படிந்தகறை
விண்ணவரை யமுதூட்டி விளங்குகின்ற கறையென்பார்
மண்ணவரை யமுதூட்டி வானுலகங் காப்பதுவும்
எண்ணருஞ் சீர்ப்பெருக்காள ரெருதுசுவ லிடுகறையே. (16)

## பகடுபூட்டற் சிறப்பு

ஊட்டுவார் பிறருளரோ வுலகுதனி லுழுபகடு
பூட்டுவார் புகழன்றிப் பிறர்புகழும் புகழாமோ
நாட்டுவார் சயத்துவச நயப்பாரை யிவர்க்குநிகர்
காட்டுவார் யார்கொலிந்தக் கடல்சூழ்ந்த வையகத்தே. (17)

## ஏர் பூட்டற் சிறப்பு

பார்பூட்டுந் திசையனைத்தும் பகடுகளும் பரம்பூணு
போர்பூட்டுங் காமனுந்தன் பொருசிலைமேற் சரம்பூட்டான்
கார்பூட்டுங் கொடைத்தடக்கைக் காவேரி வளநாடர்
ஏர்பூட்டி னல்லதுமற் றிரவியுந்தேர் பூட்டானே. (18)

## ஏர் நடத்தற் சிறப்பு

கார்நடக்கும் படிநடக்குங் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சா லியலிசைநா டகநடக்குஞ்
சீர்நடக்குந் திறநடக்குந் திருவறத்தின் செயனடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே. (19)

## உழுநர் சிறப்பு

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்
தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ விவருடனே யியலுமிது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே.
(20)

## உழவின் சிறப்பு

அலகிலா மறைவிளங்கு மந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கு
மலர்குலாந் திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கும்
உலகெலா மொலிவிளங்கு முழவருழு முழவாலே. (21)

## படைச்சாலின் சிறப்பு

பழுதுசால் வகையறியாப் பழமறையோர் பெருவேள்விக்
குழுதுசால் வதுகலப்பை யுயர்வான தென்றக்கால்
எழுதுசால் பெருங்கீர்த்தி யேராளும் பெருக்காளர்
உழுதசால் வழியன்றி யுலகுவழி யறியாதே. (22)

## மண்வெட்டிச் சிறப்பு

மட்டிருக்குந் திருமாது மகிழ்ந்திருக்கும் பூமாது
முட்டிருக்குஞ் செயமாது முன்னிருப்பார் முதுநிலத்து
விட்டிருக்குங் கலிதொலைத்து வேளாளர் தடக்கையினிற்
கொட்டிருக்க வொருநாளுங் குறையிருக்க மாட்டாதே. (23)

## வரம்புகோலுதற் சிறப்பு

மெய்வரம்பா நிற்கின்ற வேதநூ னெறிவரம்பாம்
இவ்வரம்பு மவ்வரம்பு மிப்புவிக்கு வரம்பாமோ
பொய்வரம் புதவிர்த்தருளும் புவிமடந்தை திருமைந்தர்
செய்வரம்பு திருத்தாரேற் றிசைவரம்பு திருந்தாதே. (24)

## எருக்கூடைச் சிறப்பு

அடுத்திறக்கிப் பெருங்கூடை யளவுபட வேயெருவை
எடுத்திறக்கித் தலைமேலே கொண்டவர்தா மிடையிடையே
கொடுத்திறக்கி நிலமகளைக் குட்பிட்டு வணங்காரேற்
படுத்திறக்கித் திரிவார்தம் பழிமறுக்க மாட்டாரே. (25)

## சேறுசெய்தற் சிறப்பு

வெறுப்பதெல்லாம் பொய்யினையே வேளாளர் மெய்யாக
ஒறுப்பதெல்லாங் கலியினையே யுள்ளத்தால் வெள்ளத்தாற்
செறுப்பதெல்லாம் புல்லினையே செய்யின்வள மறிந்தறிந்து
மறிப்பதெல்லாஞ் சேற்றினையே வளம்படுதற் பொருட்டாயே.
(26)

## பரம்படித்தற் சிறப்பு

வரம்படிக்க மலர்பரப்பி வயலடிக்க வரம்புதொறுங்
குரம்படிக்க மணிகொழிக்குங் குலப்பொன்னித் திருநாடர்
பரம்படிக்க வுடைந்தளைந்த பழனச்சேற் றுரமன்றி
உரம்படிப்பப் பிறிதுண்டோ வுண்டாயி னுரையீரே. (27)

## வித்துவிளைத்தற் சிறப்பு

பத்திவிளைத் திடுந்தெய்வம் பணிவார்க்குந் தற்பரமா
முத்திவிளைத் திடுஞான முதல்வருக்கு மின்னமுதம்
வைத்துவிளைத் திடுவார்க்கும் வல்லவர்க்கும் பெருக்காளர்
வித்துவிளைத் திடிலன்றி வேண்டுவன விளையாவே. (28)

## முளையின் சிறப்பு

திறைமயங்கா தருள்விளங்குஞ் செயன்மயங்காத் திறல்வேந்தர்
நிறைமயங்கா வணிகேசர் நிலைமயங்கா வந்தணர்கண்
மறைமயங்கா தொருநாளு மனுமயங்கா துலகத்தின்
முறைமயங்கா தவர்வயலின் முளைமயங்காத் திறத்தாலே.
(29)

## நாற்றங்காற் சிறப்பு

ஏறுவளர்த் திடுமுகிலு மிசைவளர்க்கு மெனவுரைப்பின்
ஆறுவளர்த் திடுவதுசென் றலைகடலைத் தானன்றோ
வேறுவளர்ப் பனகிடப்ப வேளாளர் விளைவயலின்
நாறுவளர்த் திடிலன்றி ஞாலமுயிர் வளராதே. (30)

## நாறுபறித்தற் சிறப்பு

வெறுத்துமீன் சனிபுகிலென் வெள்ளிதெற்கே யாயிடிலென்
குறித்தநாள் வரம்பழியாக் குலப்பொன்னித் திருநாடர்
மறித்துநாட் டிடநின்ற வளவயலி னிடைநாற்றைப்
பறித்துநாட் கொண்டதற்பின் பார்பசிக்க மாட்டாதே. (31)

## நாற்றுமுடிசுமத்தற் சிறப்பு

மாணிக்க முதலாய மணியழுத்தித் தொழில்சமைத்த
ஆணிப்பொன் முடிவேந்த ரணிமுடியு முடியாமோ
பேணிப்பைங் கோலமுடி பெருக்காளர் சுமவாரேற்
சேணுக்குந்திசைபுறத்துஞ் செங்கோன்மைசெல்லாதே. (32)

## வயலின்முடிசேர்த்தற் சிறப்பு

தென்னன்முடி சேரன்முடி தேங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த காசினியோர் தங்கண்முடி
இன்னமுடி யன்றியுமற் றெடுத்துரைத்த முடிகளெல்லா
மன்னுமுடி வேளாளர் வயலின்முடி கொண்டன்றே. (33)

## முடிவிளம்புதற் சிறப்பு

வெய்யகலி வலிதொலைக்கும் வேளாளர் விளைவயலிற்
செய்யின்முடி விளம்பாரேல் ,விளம்புவன சிலவுளவோ
மையறுமந் தணர்விளம்பார் மறைமனுமன் னவர்விளம்பார்
ஐயமறு புலவோரு மருந்தமிழ்நூல் விளம்பாரே. (34)

## கைப்பாங்கின் சிறப்பு

மெய்ப்பாங்கு படக்கிடந்த வேதநூல் கற்ருலென்
பொய்ப்பாங்கு படப்பிறரைப் புகழுநூல் கற்ருலென்
செய்ப்பாங்கு படக்கிடந்த செழுஞ்சாலி நன்ருற்றைக்
கைப்பாங்கு பகுந்துநடக் கற்ருரே கற்ருரே. (35)

## நடவுமுனைச் சிறப்பு

உலகத்திற் பகடுழக்கு மோங்குமுடித் திறல்வேந்தர்
அலறத்திண் பகடுழக்கு மதுவுமொரு முனையாமோ
உலகத்திற் பகடுழக்கு முயர்முடிகொள் வேளாளர்
சிலவருழச் சிலவர்நடு மவையன்ருே திருமுனையே. (36)

## பயிர்விளைத்தற் சிறப்பு

ஏராலே சேருக்கி யெருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமையன்றிக்
காராலே காவேரி நதியாலே காசினியில்
ஆராலே பசிதீர்வா ரகலிடத்திற் பிறந்தோரே. (37)

## பயிர்முதற் சிறப்பு

அந்தணர்க்கு வேதமுத லரசருக்கு வெற்றிமுதல்
முந்தியசீர் வணிகருக்கு முதலாய முதலுலகில்
வந்தவுயிர் தமக்கெல்லா மருந்தாக வைத்தமுதல்
செந்தமிழ்க்கு முதலாய திருவாளர் செய்முதலே. (38)

## பயிர்வளர்த்தற் சிறப்பு

சீர்வளரு மறைவளருந் திறல்வேந்தர் முடிவளரும்
பேர்வளரும் வணிகருக்குப் பெருநிதிய மிகவளரும்
ஏர்வளருந் திருவளரு மிசைவளருங் கடல்சூழ்ந்த
பார்வளருங் காராளர் பயிர்வளருந் திறத்தாலே. (39)

## ஏற்றத்தின் சிறப்பு

காற்றுமேல் வருகின்ற கார்விடினுங் கடல்சுவறி
யாற்றுநீ ரறவெள்ளி யரசனுந்தெற் காயிடினும்
ஏற்றமே கொடுநாளு மிறைத்துலகம் விளைவித்துக்
காத்துமே யுயிர்வளர்த்தல் காராளர் தங்கடனே. (40)

## துலைநீரின் சிறப்பு

கலையிட்ட மறைவேந்தர் கனல்வேள்வி வளர்ப்பதுவும்
மலையிட்ட புயத்தரசர் மணிமகுடஞ் சூட்டுவதுந்
தலையிட்ட வணிகருயத் தனமீட்டப் படுவதுவு
நிலையிட்ட வேளாளர் துலையிட்ட நீராலே. (41)

## கரம்புதிருத்தற் சிறப்பு

மேடுவெட்டி வளப்படுத்தி மிகவரம்பு நிலைநிறுத்திக்
காடுவெட்டி யுலகநெறிக் காராளர் காத்திலரேல்
மேடுவெட்டிக் குறும்பறுக்கும் வேல்வேந்த ரெற்ருலுங்
காடுவெட்டி யுழுதுவருங் கலிகளைய மாட்டாரே. (42)

## புழுதிச் சிறப்பு

எழுதொணு மறைவிளங்கு மியலிசைநா டகம்விளங்கும்
பழுதிலா வறம்விளங்கும் பார்வேந்தர் முடிவிளங்கும்
உழுதுசால் பலபோக்கி யுழவருழக் கியவெங்காற்
புழுதியால் விளையாத பொருளுளவோ புகலீரே. (43)

## பைங்கூழ்ச் சிறப்பு

கெட்டாரைத் தாங்குதலாற் கேடுபடாத் தொழிற்குலத்தோர்
ஒட்டாரென் றொருவரையும் வரையாத வுயர்நலத்தோர்
பட்டாங்கு பகர்ந்தோர்க்கும் பசியகலப் பைங்கூழை
நட்டாரே வையமெல்லா நலந்திகழ நட்டாரே. (44)

## பயிருக்குத் தண்ணீர் பாய்த்தற் சிறப்பு

கார்தாங்குங் காவேரி நதிதாங்குங் காராளர்
ஏர்தாங்கு வாரன்றி யாவரே தாங்கவல்லார்
பார்தாங்கு மன்னுயிரின் பசிதாங்கும் பைங்கூழின்
நீர்தாங்கு வாரலரோ நிலந்தாங்கு கின்றாரே. (45)

## களைகளைதற் சிறப்பு

வளைகளையு மணிகளையு மலர்களையும் வரும்பலவின்
சுளைகளையுங் கொடுகரைக்கே சொரிபொன்னித் திருநாடர்
விளைகளையுண் செஞ்சாலி வேரூன்றிக் கோடுகொள்ளக்
களைகளையா விடில்வேந்தர் கலிகளைய மாட்டாரே. (46)

## கருப்பிடித்தற் சிறப்பு

திருவடையுந் திறலடையுஞ் சீரடையுஞ் செறிவடையும்
உருவடையு முயர்வடையு முலகெலா முயர்ந்தோங்குந்
தருவடையுங் கொடையாளர் தண்வயலிற் செஞ்சாலி
கருவடையிற் பூதலத்திற் கலியடைய மாட்டாதே. (47)

## ஈற்றேறும் சிறப்பு

ஏற்றேறு மரன்சிறப்புக் கெழிலேறு மகத்தழல்கள்
மாற்றேறு மரசர்முடி வளர்ந்தேறும் வளமைமிகும்
ஊற்றேறுங் குலப்பொன்னி யுறைநாட ரிடுஞ்சாலி
ஈற்றேறும் போதுகலி யீடேற மாட்டாதே. (48)

## பசுங்கதிர்ச் சிறப்பு

முதிராத பருவத்து முற்றியநற் பருவத்துங்
கதிராகி யுயிர்வளர்ப்ப திவர்வளர்க்குங் கதிரன்றே
எதிராக வருகின்ற வெரிகதிருங் குளிர்கதிருங்
கதிராகி யுயிர்வளர்ப்ப துண்டாயிற் காட்டீரே. (49)

## நெற்குலைவளைதற் சிறப்பு

அலைவளையும் புவிவேந்த ரங்கையிற்றங் கியவீரச்
சிலைவளையு மதன்கருப்புச் சிலைவளையுங் கொடுங்கலியின்
தலைவளையுங் காராளர் தண்வயலிற் செஞ்சாலிக்
குலைவளையும் பொழுதினிற்செங் கோல்வளைய மாட்டாதே.
(50)

## சோறிடுஞ் சிறப்பு

அறங்காணும் புகழ்காணு மருமறையி னுகமத்தின்
திறங்காணுஞ் செயங்காணுந் திருவளர்க்கு நிதிகாணும்
மறங்காணுங் கருங்கலியின் வலிதொலைத்த காராளர்
புறங்காணுஞ் சோறிட்டுப் புறங்காணப் புகுந்திடினே. (51)

## அரிகதிர்வழங்குஞ் சிறப்பு

அரிவுண்ட பொற்கதிரை நெற்கதிர்நே ராதுலர்க்குப்
பரிவுண்ட பெருவார்த்தை புதிதன்று பழைமைத்தே
விரிவுண்ட கடற்படியு மேகங்கண் மறுத்தாலுந்
திரிவுண்டோ காராளர் செயலினுக்குச் செப்பீரே. (52)

## அரிசூட்டின் சிறப்பு

கோடுவரம் பிடையுலவுங் குலப்பொன்னித் திருநாடர்
நீடுபெரும் புகழ்வளரு நிலமடந்தை திருமக்கள்
பீடுவரம் பிடைவயலிற் பிறைவாளிற் கடிகின்ற
சூடுவரம் பேருதேற் சுருதிவரம் பேருதே. (53)

## களஞ்செய்தற் சிறப்பு

சீரான விறல்வேந்தர் செருவிளைத்துச் செல்லுவதும்
பேரான மனுநீதி பிறழாது விளங்குவதும்
நீராலே செஞ்சாலி விளைவித்து நெறிநடத்துங்
காராளர் விளைவயலிற் களம்பண்ணும் பொருட்டாலே. (54)

## படுசூட்டின் சிறப்பு

கடிசூட்டு மலர்வாளிக் காமனடல் சூடுவதுங்
கொடிசூட்டு மணிமாடக் கோபுரம்பொன் சூடுவதும்
முடிசூட்டி வயவேந்தர் மூவுலகு மிறைஞ்சுபுகழ்
படிசூட்டி யிருப்பதெல்லாம் படுசூட்டின் வலியாலே. (55)

## அரிமிதிகோலின் சிறப்பு

முருட்டின்மிகு வெம் பகைவர்
முரண் கெடுத்திவ்வுலக மெல்லாந்
தெருட்டி நெறி செல்கின்ற
செங்கோன்மை செலுத்துங்கோல்
வெருட்டின்மிகுங் கருங்கலியை
வேரோடு மகற்றுங்கோல்
சுருட்டிமிகத் தடிந்துசெந்நெற்
சூடுமிதித் திடுங்கோலே. (56)

## போர்செய்தற் சிறப்பு

காராளுங் கரியினமும் பரியினமுங் கைவகுத்துப்
போராளு முடிவேந்தர் போர்க்கோல மெந்நாளுஞ்
சீராளுஞ் செழும்பொன்னித் திருநாடர் புகழ்விளக்கும்
ஏராளுங் காராள ரிவர்செய்யும் போராலே. (57)

## போர்க்களம்பாடுதற் சிறப்பு

வளம்பாடுங் குடைமன்னர் மதயானை படப்பொருத
களம்பாடும் பெருஞ்செல்வங் காசினியிற் சிறந்தன்று
தளம்பாடுந் தாரகலத் தாடாளர் தம்முடைய
களம்பாடும் பெருஞ்செல்வங் காசினியிற் சிறந்ததே. (58)

## போர்க்களச் சிறப்பு

பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வ மழிவுபடா திருத்தலினுன்
றேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்
ஏர்வேந்தர் போர்க்களத்து ளிரப்பவருந் தோலாரே. (59)

## போர்செய்வோர் நெல்லரிவாரை விளித்தற் சிறப்பு

நாவலோ நாவலென நாடறிய முறையிட்ட
ஏவலோர் போர்க்களத்தி லெதிர்நிற்பர் முத்தமிழ்தேர்
பாவலோ ரிசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர்
காவலோ ரெல்லாருங் கையேற்கும் பொருட்டாலே. (60)

## போர்படுத்தற் சிறப்பு

எடுத்தபோர்க் களத்தரச ரிணைப்பகடு சிலநடத்திப்
படுத்தபோர் பயந்ததனுற் பார்தாங்கி வாழ்வதெல்லாம்
எடுத்தபோ ருழவளரு மிணைப்பகடு சிலநடத்திப்
படுத்தபோர் வையகத்தில் விளங்குகின்ற பயனாலே. (61)

## நெற்பொலிச் சிறப்பு

விற்பொலியும் பெருங்கீர்த்தி வேளாளர் விளைவயலில்
நெற்பொலியுண் டாமாகி னிலமகளும் பொலிவுண்டாம்
பொற்பொலி வுண்டாமுலகம் புகழ்ப்பொலிவுண்டாம்புலவோர்
சொற்பொலிவுண் டாங்கலியின் றுயர்பொலிய மாட்டாதே.
(62)

## நெற்குவித்தற் சிறப்பு

தன்னிகரொன் றெவ்வாத தலம்வளர்க்கும் பெருக்காளர்
மன்னுபெருங் களத்தினிடை மாருதத்திற் றூற்றியிடுஞ்
செந்நெல்லைப் பொலிவாலே செம்பொன்மலை யெனக்குவித்தே
அந்நெல்லின் பொலியாலே யவனியுயிர் வளர்ப்பாரே. (63)

## கூடைச் சிறப்பு

ஆடையா பரணங்க ளணிந்துமுடி சுமந்திடலும்
ஓடையா னையினெருத்த முயர்ந்துலகந் தாங்குதலும்
பேடையோ டனநீங்காப் பெருங்கழனிப் பெருக்காளர்
கூடையா னதுகையிற் கொண்டுகளம் புகுந்திடினே.
(64)

## பொலிதூற்றுங்கூடைச் சிறப்பு

வலியாற்று மன்னவர்க்குந் தேவருக்கு மறையவர்க்கும்
ஒலியாற்றும் பேருலகி லுய்யவமு திடுங்கூடை
கலிமாற்றி நயந்தபுகழ்க் காராளர் தம்முடைய
பொலிதூற்றுங் கூடைக்குப் போதுவதோ புகலீரே. (65)

## பொலிகோலின் சிறப்பு

சீற்றங்கொள் கருங்கலியைச் செறுக்குங்கோல் செகதலத்துக்
கூற்றங்கொண் மனுநெறியை யுண்டாக்கி வளர்க்குங்கோல்
ஏற்றங்கொள் வயவேந்தர்க் கெப்பொருளுங் கொடுத்துலகம்
போற்றுஞ்சொற் பெருக்காளர் பூங்கையினிற் பொலிகோலே.
(66)

## விரைக்கோட்டைச் சிறப்பு

திருத்தோட்டுப் பிரமாவாற் செனிக்கின்ற வுயிர்களுக்கும்
உருத்தோட்டும் புகழுக்கு முரிமைமுறை வளர்க்கின்ற
வரைக்கோட்டுத் திணிபுயத்து வளர்பொன்னித் திருநாடர்
விரைக்கோட்டைகொண்டன்றேவேந்தரிடுங்கோட்டைகளே
(67)

## கல்லறைச் சிறப்பு

தளர்ந்தவுயி ரித்தனைக்குந் தாளாள ரெண்டிசையும்
வளர்ந்தபுகழ்ப் பெருக்காளர் வளமையா ருரைப்பாரே
அளந்துலக மனைத்தாளு மரசர்வே தியர்புலவர்
களந்துவைக்க வையுகுத்த கல்லறைக ளுண்பாரேல்.
(68)

## மெய்ப்பேறு

அரியாதனத்தின்மேலிருந்தேயம்பொற்குடைக்கீ ழரசியற்றும்
பெரியார்பக்கல் பெறும்பேறும் பேறேயல்ல பெருக்காளர்
சொரியாநிற்பச் சிலர்முகந்து தூற்றுநிற்பச் சிலரளந்து
புரியாநிற்பப் பெறும்பேறுக்கது நேரொக்கப் போதாதே.
(69)

## வாழ்த்து

பார்வாழி நான்மறைநூற் பருணிதரா குதிவாழி
கார்வாழி வளவர்பிரான் காவேரி நதிவாழி
பேர்வாழி பெருக்காளர் பெருஞ்செல்வக் கிளைவாழி
ஏர்வாழி யிசைவாழி யெழுபத்தொன் பதுநாடே. - (70)

ஏரெழுபது முற்றிற்று,

உ

கணபதி துணை.

# திருக்கைவழக்கம்

கங்கை குலந்தழைக்கக் காட்டும் பெருங்கீர்த்தி
மங்கை பிரியாமல் வாழுங்கை—திங்களணி
எம்பிரான் எம்பெருமான் இந்திரா திபர்க்கரிய
தம்பிரா னுக்குரைத்த சந்தனக்கை—அம்பொன்
வளைவாரி வையகமும் வானகமும் போற்ற
முளைவாரி வந்த முழுக்கை—கிளைவாழக்
கச்சித் தலத்தரனைக் கல்லால் எறியமறந்
தெச்சில் தயிர்ச்சோ(று) எறியுங்கை—பச்சைமிகு
தேமா வடுக்கமரிற் சிந்திற்றென் றேகழுத்தை
யாமா வெனவே அரியுங்கை—வாமமறை
ஓதுபுகழ் நாயனுடன் ஊரன் புறமென்றே
மோதுதடி கொண்டு முடுக்குங்கை—தீதகல
அஞ்செழுத்தே யொன்றாகி அப்பரெனத் தோன்றியரன்
செஞ்சரணத் தேபூசை செய்யுங்கை—வஞ்சியர்பால்
தூதரனைத் தான்விடுத்த சுந்தரனைக் காணுமல்
பேதமறத் தன்வயிறு பீறுங்கை—கோதகன்ற
சேர்ந்த மணவாசல் சிவனடியார்க் காமகடன்
கூந்தல் அறிந்து கொடுக்குங்கை—ஏந்தரிய
வட்டால் உறுபொருளால் வந்ததொண்டர்க் காமூர்க்கர்
தட்டா தமுதளிக்கும் தங்கக்கை—எட்டாது
போக்கு வரவற்ற பூரணனை நிந்திப்பார்
நாக்கை யரிந்துபுகழ் நாட்டுங்கை—ஆக்கையுறு
தாயிலார் தந்தையிலார் தம்மைமனத் துள்வைத்து
வாயிலார் பூசிக்கும் வாகுளகை—ஆய

வினையடு வாராகி விறல்கொள் பொருளை
முனையடுவார் நல்கிய முன்கை—வினையகல
அன்றுவரும் மாதவருக்(கு) ஆக்கியமாங் கனிகேட்க
ஒன்றவரு வித்தளித்தே ஓங்குங்கை—நின்றதுலாக்
கோலாலக் கோவணத்துக் கள்வர்தங் கோண்முழுதும்
ஆலாவ ளந்தறிந்த மாண்புளகை—யேலவார்
கூந்தலாள் தன்னைக் குலமறையோர்க் கீந்தொக்கல்
ஏந்துவா ளாலேவிண் ஏற்றுங்கை—சாந்தமுற
ஓது பரனை உணர்த்துஞ் சிவாகமங்கள்
வேத புராணங்கள் விரிக்குங்கை—தீதில்
அருமறையைச் செந்தமிழால் அப்ப ரெனவந்து
திருமுறைக ளாச்சேர்க்குஞ் செங்கை—பெருமையுடன்
ஏதமில் வேதத்தை எடுத்தே சிவாலயத்துள்
ஓதுவா ராய்வந்தே ஓதுங்கை—காதலுடன்
வேதமொரு நான்கினையும் மிக்கதமிழ் நாலடியால்
ஓதியுரைத் தேயுலகில் ஒளிருங்கை—போதமுற
வேள்வியோ ரைந்தோடு வேளாளத் தோமமுமே
ஆள்வினை யாலெடுத் தாளுங்கை—நீணிலத்துள்
ஆன்படு நெய்விட் டளவிலா வாகுதியால்
வான்படச் சைவத்தீ வளர்க்குங்கை—மேம்படவே
கல்லார்கள் என்றுமற் கற்றோர்கள் என்றுமல்
எல்லாரை யுங்காத்தீ டேற்றுங்கை—வல்லமைசேர்
மைம்மா முகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோல்
கைம்மா றிலாதளிக்கும் கற்பகக்கை—சும்மையார்
ஊருணி நீர்போல் உலகத் தவர்க்கெல்லாம்
பேரறிவா லீயும் பிரதாபக்கை—பாரில்
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
கொடுக்க விசைந்த குளிர்க்கை—யிடுக்கணின்றன்
மாமறையோர் மன்னர் வருவினைஞர் சங்கரர்க்குந்
தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை—மாகளத்து

ஏற்கவந்த ஆதுலருக்(கு) இல்லையென் றுதுநெல்லை
கார்க்கையினுன் முக்கையிட்ட கற்பகக்கை—தீர்க்கமுடன்
செம்பொன் விளைகளத்தூர் செந்நெல் விளைந்ததனை
நம்பிமறை யோர்க்களித்த நாணயக்கை—அம்பொற்
பார்பூட்டு மன்னர் பரிகரிபூட் டக்கதிரோன்
தேர்பூட்ட ஏர்பூட்டும் செம்பொற்கை—வீரமதன்
ஐங்கோல் தொடுக்க அணைகோல் எடுக்கவுழும்
பைங்கோல் பிடிக்கும் பதுமக்கை—இங்கிதமாம்
சீர்படைத்த பூபாலர் செங்கோல் பிடிப்பதற்குப்
பேர்படைத்த மேழி பிடிக்குங்கை—கார்படைத்த
மிஞ்சுமதி கீர்த்தியைப்போன் மேதினியெல் லாந்தழைக்கச்
செஞ்சாலி நாற்றைத் தெளிக்குங்கை—எஞ்சாமல்
வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்க
கள்ளக் களைகளைந்த கற்பகக்கை—வள்ளுறையும்
விற்போர் மதகரிப்போர் வெம்பரிப்போர் வெற்றிப்போர்
நெற்போர் முதற்போர் நெரித்திடுங்கை—பற்பலவாம்
காணி உழுதுண்டு கழிபொருளெல் லாங்கொண்டு
வாணிபங்கள் செய்தங்கு மாற்றுங்கை—மாணிவர்ந்த
ஐந்திணையின் பொருள்யாவும் அறத்தாலே தாம்தேடித்
தந்திணையில் வந்தணையத் தாங்குங்கை—முந்திப்
பிறர்பொருளுந் தம்பொருள்போற் பேணியேமூன் றுமெனவே
அறவளவை யாலளக்கும் அங்கை—திறமுடனே
ஊர்காக்கு மரசுக்கு உறுதியுழவாம் அதற்காய்
ஆள்காப்பே காப்பாக ஆளுங்கை—வான்சுவைபோல்
எண்ணை எழுத்தை இசையை இலக்கணத்தை
வண்மைபெற உண்டாக்கும் வாகுளகை—நுண்மையதாய்
மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென
எண்ணிஎழு திக்கொடுத்த ஏற்றக்கை—திண்ணமதாய்
மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தருமந் தழைக்குங்கை—ஈனமிலா

தொடையில் எழுஞ்சிலந்தித் தோற்றுவிக்கப் பட்டின்
புடவை கிழித்த பெருங்கை—துடவைதனில்
**ஏரெழுப** தோதியரங் கேற்றுங் களரியிலே
காரி விடநாகம் கடிக்குங்கை—பாரதனில்
**நாவிற் புகழ்கம்ப** நாடற் கடிமையென்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை—ஆவலுடன்
சங்கையிட்டுத் தள்ளாமல் தன்சோற்றை வந்தவற்குப்
பங்கையிட் டிரட்சித்த பங்கயக்கை—பொங்கமுடன்
பொன்னு லமுதும் பொறிக்கறியுந் தான்கொணர்ந்து
நன்னு வலர்க்களித்த நாணயக்கை—பன்னரிய
வையகமெங் குந்தேடி வந்ததமி ழோன்புகழச்
செய்யமுடி யைக்கொடுத்த செம்பொற்கை—துய்யபுகழ்
அன்றீந்த நாகெழுப தானவெரு மைத்திறத்தைக்
கன்றேடு நல்குங் கடகக்கை—வென்றிதரும்
ஓராளை நூறு யிரக்கலநெல் லோர்கவிக்குச்
சீராக நல்குந் தியாகக்கை—நேரா
எறும்புக்கும் ஆஸ்ப்பதந்தான் இல்லையென்ற மட்டில்
திறம்புக்க யானைதருஞ் செங்கை—யரும்புதனில்
எண்ணு யிரமுனிவர்க்(கு) ஏற்றபடி அப்படியே
பண்ணு கக்கொடுக்கும் பராக்கிரமக்கை—விண்ணுடர்
மூக்கிற் புகைபுரிந்த மூதாவின் வாயிடத்து
நீக்கியபை நாக்கதனில் நீட்டுங்கை—ஊக்கமுடன்
பாவல னெச்சில் படுமாங் கனியெடுத்து
ஆவலுடன் நன்றுய் அருந்துங்கை—தாவரிய
வண்டமிழோன் தானுதைத்த வாகுளகா லுக்குப்பொன்
வெண்டயமிட் டேவணங்கும் வெற்றிக்கை—புண்டரிகக்
கையாற் புலவன் கனகமுடி மேற்குட்டச்
செய்யாழி பண்ணியிட்ட தீரக்கை—பையவே
மிக்கபுல வனுக்காக வேசிமனை மட்டாகத்
தக்கசிவி கைக்கணை தாங்குங்கை—ஒக்குமென

ஏதமற்ற கீர்த்தியைக்கொண் டேட்டகத்தி லேயடிமைச்
சாதனமிட் டேகொடுத்த தங்கக்கை—மேதினியிற்
சூலி முதுகிற் சுடச்சுடவப் போதுசமை
பாலடிசில் தன்னைப் படைக்குங்கை—சாலவே
நாணந் தராமல் நடுங்காமல் கூசாமல்
பாணன் பிணத்தைப் பரிக்குங்கை—காணவே
தண்டமிழோன் தன்மனத்திற் சந்தேகந் தீரக்கூழ்
உண்டவயிற் றைப்பீறி யூற்றுங்கை—கண்டளவில்
வன்னி யிடைமூழ்கி வாஞோர் பழிகழுவிக்
கன்னிதனை யேமணந்த காட்சிக்கை—துன்னுமொரு
பேருலகை யெல்லாம் பிழைப்பிக்கும் ஓர்கொழுவின்
கூரிலொரு வன்கழுத்தைக் குத்துங்கை—பாரறிய
திருப்பருத்திக் குன்றிற் சிவஞால யங்கள்பல
விருப்புடனே கட்டி வீறுங்கை—பருப்பதம்போல்
அட்டதிக்கும் எண்கீர்த்தி ஆயிரத்தெட் டானைதனை
வெட்டிப் பரணிகொண்ட வீரக்கை—திட்டமுடன்
கூர்த்த புகழ்கண்ட கோளமட் டும்படர
நாற்றிக்கு மேருவினி நாட்டுங்கை—ஆர்த்தபுகழ்
மேழிக் கொடிசிங்க வெற்றிக் கொடிகுயிலின்
வாழிக்கொடியே மருவுங்கை—நீளுலகில்
சாற்றுமொட்டக் கூத்தன் சரசகவி சொல்லப்பால்
ஆற்றுநீர் கொணர்ந்த ஆண்மைக்கை—நேர்த்திபெற
விளைபயி ரைப்பார்த்து விரைக்கால் புலத்தை
வளைய மதிலிட்டு வருங்கை—தளையவரும்
நீலி தனக்கஞ்சி நின்றவணி கேசனுக்காக்
கோலி யபயங் கொடுக்குங்கை—மேலச்சம்
வீறுபெறும் பறையன் வீயாம லோர்கலத்தில்
சோறு பிசைந்துண்ட சுடர்மணிக்கை—பேறும்
பேர்காக்க இந்திரற்காப் பேசுபிணை என்றிறைமுன்
கார்காக்கும் ஒப்பில் கமலக்கை—தீர்வில்

மனக்கவலை யுற்றவணி கன்முன் னேனின்று
தனைக்கா வெனக்கேட்ட தற்கை—வனக்குன்றின்
மங்கையொரு பாகற்கும் மன்னவர்க்கும் மாதவர்க்கும்
துங்கமணி முடியைச் சூட்டுங்கை—அங்கன்
தலாபாரந் தாங்கும் தனியரசும் பொன்னும்
துலாபாரந் தட்டினில் தூக்குங்கை—இலாபமுறும்
பண்டுமுடி நாவிதனல் பற்றற்பாற் றன்றென்றே
கொண்டைகட்டிக் கொண்டாளுங் கோமளக்கை-பண்டைய
ஏட்டாருந் தொண்டநாட்(டு) எழுபத்தொன் பானுகும் [ தாம்
நாட்டாரென் றேபுகழை நாட்டுங்கை—வாட்டமிலா
ஆர்த்த குடிமக்கள் அறுமூவர்க் காம்வழக்கைத்
தீர்த்தெழுதி ஓட்டகத்திற் சேர்க்குங்கை—சீர்த்த
தொகாநாட் டார்கூடித் துரைக்கெழுது மேட்டில்
மகாநாட்டா ரென்றுவைக்கும் வண்கை—சுகமயமாய்
உள்ளங் குழைந்தாய் உழவாற் பெருக்கவிதை
பிள்ளையெனக் கேயுதவப் பேணுங்கை—வள்ளல்
கதமிரெண்டக் காவலன் காமுறு மக்கட்குள்
முதலியெனப் பேர்படைத்த முன்கை—சிதமாய்
உசாவு கடல்கடைய வோடதி யீந்து
தசாங்க மிறைநல்கத் தாங்குங்கை—நிசாங்கமதாய்
சங்கருகு தீவட்டிச் சாமரைய தாகைகுடை
பொங்குதொண்டன் நல்கப் புரக்குங்கை—கங்குல்பகல்
நடக்க யிருக்கை நகைக்கை மிடிதீர்க்கை
கொடுக்கை செழுங்கை குளிர்க்கை—தொடுத்ததெல்லாஞ்
சிராக வுண்டாக்குஞ் செங்கைப் பெருங்கருணைக்
காராளர் கற்பகப்பூங் கை.

முற்றும்.

---

கருணாநிதி பவர் பிரஸ், வேலூர் (சேலம்)

## மாவட்ட மன்ற உயர்நிலைப்பள்ளி,

## பொத்தனூர்.



ஆறுமுக நிலையம் - அறிவியல் ஆய்வகம்